III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.215/2023

Deposition of witness for the Plaintiff/PW1
solemnly by Tmt.K.Shanthi, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 06-02-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிவண்ணன் | Village | : |
| Father's / Husband's Name | : மாசிலாமணி | Calling | : |
| Age | : | Taluk | : |

**<u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை (Party in Person)</u>**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

தற்பொழுது நான் என்னுடைய குடும்பத்துடன் பழைய பல்லாவரத்தில் வசித்து வருகின்றேன். என்னுடைய நிரந்தர முகவரி 11/1, ஐயப்பன் தெரு, ராமாபுரம், அம்பத்தூர். என்னுடைய குழந்தைகள் எங்கே கல்வி பயின்றார்கள் என்றால் அவர்கள் ஐயப்பன் தெருவில் பிறந்து, அம்பத்தூர், மடிப்பாக்கம் ஆகிய இடங்களில் படித்து தற்பொழுது காட்டாங்குளத்தூரில் படித்து கொண்டு வருகிறார். 21.11.2019 ல் வாதி மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனாரான மாசிலாமணி அவர்களை சில ரவுகளை கொண்டு வீட்டில் வைத்து மிரட்டி ஸ்டாம்ப் பேப்பரில் கையெழுத்து வாங்க முயற்சித்தேன் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக தகப்பனார் மாசிலாமணி அவர்கள் காவல் கட்டுப்பாட்டு அறை 100 க்கு போன் செய்து அம்பத்தூர் காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் முருகானந்தம் விசாரணை செய்து இனிமேல் நான் ஐய்யப்பன் தெருவில் உள்ள வீட்டிற்கு வரமாட்டேன் என்று எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. 09.09.2018 ல் நான் இருசக்கர வாகனத்தின் சாவியை வைத்து தகப்பனாரையும், 1 ஆம் பிரதிவாதியையும் 1 ஆம் பிரதிவாதியின் மனைவியையும் அடித்து ரத்த காயப்படுத்தினேன் என்றால் சரியல்ல. இதனை தகப்பனார் 20 ரூபாய் ஸ்டாம்ப் பேப்பரில் எழுதி வைத்திருக்கின்றார் என்றால் அது பொய். 19.09.2021 ல் நான் எனது தகப்பனார் மாசிலாமணிக்கு சட்டப்படியான

அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. 26.02.2013 ல் என்னுடைய தகப்பனார் மாசிலாமணி 1 ஆம் பிரதிவாதியான சிவசங்கரனுக்கு உயில் எழுதி வைத்திருக்கின்றார் என்றால் அது உண்மையல்ல பொய். என்னுடைய தகப்பனார் மாசிலாமணி 27.12.2021 அன்று மற்றொரு உயிலை 1 ஆம் பிரதிவாதியான சிவசங்கரனுக்கு உயில் எழுதி வைத்திருக்கின்றார் என்றால் அது உண்மையல்ல பொய். சி.ஆர்.எம்.தெருவில் இருக்கின்ற 3 வீடுகள், 6 கடைகளை 1 ஆம் பிரதிவாதி சுயசம்பாதித்து கட்டி அதனை அவரது மகள் பேருக்கு உயில் எழுதி வைத்திருக்கின்றார் என்றால் அது பொய் நான் கப்பலில் பணிபுரிந்து அதன் சம்பாதித்து கட்டிய வீடுகள் மற்றும் கடைகள் தான் இவை. என் பெயரில் என்னுடைய தகப்பனார் சொத்து எதுவும் எழுதி வைக்காத நிலையிலும் 20 வருடங்களாக நான் பல்லாவரத்தில் வசித்து வருகின்ற நிலையிலும் நான் சொன்னது போல இந்த வீடுகள், கடைகளை என்னுடைய சுயசம்பாத்தியத்தில் கட்டவில்லை என்றால் சரியல்ல. நான் கப்பலில் வேலை பார்த்தபொழுது ஐயப்பன் தெருவில் தான் திருமணம் நடைபெற்று அங்கு தான் குழந்தை பிறந்தது. 24.03.2023 ல் நான் 1 ஆம் பிரதிவாதியையும் அவரது மனைவி மற்றும் மகளை தாக்கி போலிசில் புகார் கொடுத்து அந்த வழக்கு நீதித்துறை நடுவர், அம்பத்தூர் நீதிமன்றத்தில் CC.No.483/2023 என்ற எண்ணில் நிலுவையில் இருந்து வருகின்றது என்றால் இது ஒரு பொய் வழக்கு. 21.10.2024 ல் பொய்யான ஆவணங்களை வைத்து நான் அம்பத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் நான் ஏன் என்னுடைய வீட்டிற்கு போக அனுமதிக்கப்படவில்லை என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கின்றேன். நான் ஆவடி போலிஸ் கமிஷனரிடம் பொய்யாக புனைந்த ஒரு ஆவணத்தை வைத்து புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல அது பொய். நான் ஐய்யப்பன் தெருவில் உள்ள வீடு தொடர்புடைய ஆவணங்கள் எதனையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இன்னும் முழுமையாக ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை இனிமேல் தாக்கல் செய்வேன். நான் தாக்கல் செய்திருக்கின்ற வா.த.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் ஒளிப்பட நகல்கள் என்பதால் ஏற்றுக்கொள்ளப்படமுடியாது என்றால் சரியல்ல.

**<u>2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கின் 2 ஆம் பிரதிவாதி மைதிலி எனக்கும் 1 ஆம் பிரதிவாதிக்கும் மூத்த சகோதரி என்றால் சரிதான். எங்கள் 3 பேரை தவிர சுகுணாபாய்க்கும் மாசிலாமணிக்கும் வேறு வாரிசுகள் யாரும் கிடையாது. வழக்குரை A-பட்டிகை சொத்து என்னுடைய அப்பா பெயரில் உள்ள சொத்து. இதனை அவருடைய தகப்பனார் என்னுடைய தகப்பனாருக்கு உயில் மூலமாக பாத்தியப்படுத்தி கொடுத்தார். B-பட்டிகை சொத்து என்னுடைய தாயார் பெயரில் உள்ள சொத்து. என்னுடைய தாயும் தந்தையும் இறந்தபொழுது இந்த சொத்துக்கள் தொடர்பாக எந்த ஒரு ஏற்பாட்டையும் செய்து வைக்கவில்லை என்றால் சரிதான். இந்த 2 சொத்துக்களிலும் வாடகைதாரர்கள் இருந்து வருகின்றார்கள். 2 ஆம் பிரதிவாதியான என்னுடைய அக்கா இவ்வழக்கில் தாக்கல் செய்திருக்கின்ற எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்த்திருக்கின்றேன். வழக்குரையில் கண்டுள்ள 2 சொத்துக்கள் தவிர மோரை கிராமத்தில் மற்றும் ஒரு சொத்து என்னுடைய தாயார் பெயரில் இருக்கின்றது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது என்னுடைய தாயார் மோரை கிராமத்தில் இருக்கின்ற சொத்தை கிரையம் பெற்றது தொடர்பான கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது **பி.த.சா.ஆ.1.** இந்த சொத்தை நான் இவ்வழக்கில் சேர்க்கவில்லை. வாடகை வருமானத்தை பிரிப்பதற்காக வருமானத்தையும் இவ்வழக்கில் குறிப்பிடவில்லை. இந்த எல்லா சொத்துக்களிலும் 2 ஆம் பிரதிவாதிக்கு 1/3 பாகம் இருக்கின்றது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**